Johann Crueger, 1653
arr. J.S. Bach

665.665.786



பாமாலை 612 தேவ மைந்தனான

1. தேவ மைந்தனான
இயேசு பலமான
வல்லமையினால்
சாவின் கட்டடொழித்து
கல்லறையை விட்டு,
தாம் எழுந்ததால்
பெரிய பயங்கர
எதிரிகளை ஜெயித்தார்,
நம்மையோ ரட்சித்தார்.

2. நாம் அடைவதான
மிக்க பாரமான
சாபம் நீங்கவும்,
நமக்கு ரட்சிப்பும்
நித்திய கெலிப்பும்
தேடுவதற்கும்,
அவர் சிலுவையிலே
அறையுண்டு, யூதராலே
கொல்லப்பட்டோராமே

3. பாவங்களுக்காக
இந்த விதமாக
தெய்வ நீதிக்குத்
தாழ்ச்சி ஒன்றுமற
அவர் சரிவர,
தீர்த்த பிறகு,
இப்போதும் நம்மால்
இன்னும்
தீர்க்கத் தக்கக்
கடனென்ன,
அதில் மீதி என்ன.

4. கொல்ல ஆசையாக
சாவு எதிராக
நின்றும் நம்மிலே
அத்தால் பயமில்லை;
கிறிஸ்து அதன் வில்லை
முறித்திட்டாரே.
ஆகையால் சாவதினால்
மாறி,
மோட்சத்திற்குண்டாகும்'
வாழ்வின் பாதையாகும்.

5. கல்லறைக்குள்ளான
மத்தியஸ்தரான
சிரசல்லவோ
அதிலேயிருந்து
உயிரோடெழுந்து
வந்தாரே; இப்போ
சகல தம்முடைய
நல்லவயங்களுக்கும்
ஜெயமே யிருக்கும்.

6. இப்படி நாம் சென்ற
பின்பு வாழ்வோமென்ற
நிச்சயம் உண்டே
ஆகையால் பழைய
சட்டையைக் களையப்
போவோ மென்பதே
நமது மகிழ்ச்சிக்கு
ஆனது;
பிற்பாடுண்டாகும்
வாழ்வும் புதிதாகும்.